1975 மார்ச் 24]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீடுகள் கட்டிக் கொடுக்கவே நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருக்கிறது. ஒரு கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட்சம் ஆகிறது. தவணை முறையில் ரூ. 50,000 என்ற வகையில் பெற்றுக் கொள்ளலாமென்றாலும்கூட, ரூ. 5 இலட்சம் என்ற வகையில் கொடுக்க வேண்டி வந்தால், ரூ. 10,000-ல் 40, 50 பேர்களுக்கு வீடுகள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் தவிர்க்கப்படும். ஆகவே, மக்களுடைய தேவைகளை அதிகமாகக் கவனிக்கக்கூடிய தன்மையில் தற்பொழுது வீட்டு வசதி வாரியம் செயல்பட்டு வருகிறது.

Medical Representatives

* 443 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the State Government have represented to the Centre on the question of declaring medical representatives in the State as 'Workmen' under the Industrial Disputes Act; and

(b) if so, whether any reply has been received from the Centre?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) மருத்துவப் பிரதிநிதிகளையும் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர அச்சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென்று, தமிழ்நாடு மருத்துவப் பிரதிநிதிகள் சங்கத்திடமிருந்து வந்துள்ள ஒரு மனுவை, 1970-ம் ஆண்டு அக்டோபரில் இவ்வரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்பியுள்ளது. எவ்வித பதிலும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், 1970-ம் வருஷத்திலே இந்தச் சர்க்கார் எழுதிற்று. ஆனால், இதுவரையில் பதில் வரவில்லை என்பதால், மறுபடியும் அது பற்றி அகில இந்தியத் தொழில் மந்திரிகள் மாநாட்டிலே வற்புறுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா?

[1975 மார்ச் 24

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நாம் மத்திய அரசிடம் கேட்டபொழுது, இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் பில் என்ற ஒரு காம்ப்ரஹென்சிவ் பில்லைக் கொண்டு வருவோம். அதிலே எல்லாம் அடங்கிவிடும், அடங்கிவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மசோதா எப்பொழுது வருகிறதோ, அப்பொழுதுதான் விமோசனம் கிடைக்கும். ஆனால், சம்பந்தப்பட்ட மாநாட்டிலே, மதுரையிலே, நானே கலந்து கொண்டேன். அந்த மாநாட்டிலே அவர்கள் சொன்ன கோரிக்கை நியாயம் என்று ஏற்கப் பட்டது. ஆனால், அகில இந்திய ரீதியில் இந்தப் பணியாளர்கள் இருக்கிற காரணத்தால், அகில இந்திய ரீதியில் சட்டம் கொண்டு வந்தால்தான் நல்லது என்ற வகையில், மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய அரசினுடைய சம்மதத்திற்காகக் காத்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டைப் பொறுத்தவரையிலும் சில மாநிலங்கள் திருத்தம் கொண்டு வந்து, சட்டமாக்கியிருக்கிறார்களே, அதே மாதிரி இந்தத் தொழிலாளிகள் யார் என்பதை நம்முடைய அரசிலே யார் யாரை இணைக்க விரும்புகிறார்களோ, அவர்களை இணைக்கச் சட்டத்திருத்தம் கொண்டு வர யோசனை செய்யுமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அந்த மாநாட்டுகளுக்குப் போனேன். அவர்கள் சொன்ன கருத்து நியாயமாகப்பட்டதைச் சொன்னேன். 'வர்க்மென்' என்ற தலைப்பின்கீழ் அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் தமிழக அரசுக்கு இருக்கிற எண்ணம். ஆனால், அகில இந்தியா பூராவும் அப்படிப்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அகில இந்திய அளவில் சட்டமாக வந்தால்தான் நல்லது. அங்கே இருக்கிற தொழிலாளர் நலத் துறைக்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அவர்கள் எல்லாம் பில் கொண்டு வரப் போகிறோம். கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரும் வரையிலும் பொறுத்திருக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

1975 மார்ச் 24]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மருத்துவப் பிரதிநிதிகளைப் போல், இன்னும் பல்வேறு தொழிலாளர்கள் தொழிலாளர் சட்டத்தின் பயனைப் பெற வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தினை திருத்துவதற்குள்ள உரிமை மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும், இந்தச் சட்டத்தின்கீழ் செயலாற்றும் உரிமை (வித்தின் ஃபிரேம்ஓர்க்) மாநில அரசுக்கு உண்டு. ஆகவே, அந்த ரூல்ஸை மாற்றி, இன்னும் மேற்கொண்டு எந்தெந்தத் தொழிலாளர்களைச் சேர்க்கவேண்டுமோ, அவர்களைச் சேர்க்க ஆவன செய்ய அரசாங்கம் முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட கருத்து ஒரு நல்ல யோசனையாகும். அரசு ஆலோசிக்கலாம்.

திரு. [illegible] சுரேந்திரன் : சார், 1970-ல் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1970-க்குப் [illegible] இதுவரையிலும் பதிலே இல்லை. அப்படியானால் அதற்குப் பிறகு நினைவுபடுத்துகின்ற வகையிலே ஏதாகிலும் கடிதம் எழுதியிருக்கிறார்களா? தொழிலாளர் என்பதற்கான விளக்கத் [illegible] நாமே விதிமுறைகளை மாற்றியமைக்கலாமே அப்படிச் செய்யாமல் ஏன் மத்திய அரசாங்கத்தினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதைப் பற்றி தொழிலாளர் நல அமைச்சரைச் சந்திக்கிறபோதெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டே வந்திருக்கிறோம். அகில இந்தியா பூராவிலும் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அகில இந்தியா பூராவிற்குமாகச் சேர்த்து இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது, அப்படியில்லாமல் இருந்தால் அங்கே ஒருமாதிரி இருக்கிறது, இங்கே ஒருமாதிரி இருக்கிறது என்ற நிலவரம் இருக்கும். ஆகவே பொதுவாக அகில இந்தியா பூராவிற்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதுதான் முறையாக இருக்கும் என்றுதான் நாம் அந்த முறையிலே சிபாரிசு செய்திருக்கிறோம்.